DINAMALAR 01 OCT 2008

# ஆலாந்துறையில் மருத்துவமனை துவக்குகிறது ஈஷா யோகா மையம்

கோவை, அக். 1-

கோவை அடுத்துள்ள ஆலாந்துறையில் 'ஈஷா மருத்துவமனை ' அக்., 4ம் தேதி திறக்கப்படுகிறது.

ஈஷா யோகா மையத்தின் நிர்வாக அலுவலர் ராஜரத்தினம், திட்ட இயக்குனர் சேகர், டாக்டர் சதிஷ், கோவை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லட்சுமணன் கூறிய தாவது:

கோவையை அடுத்துள்ள ஆலாந்துறையில் புதியதாக 'ஈஷா மருத்துவமனை' அக்., 4 ல் துவக்கப்படுகிறது. சுஸ்லான், பி.சி.ஐ., நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படவிருக்கும் கிராம மக்கள் மேம்பாட்டு திட்ட துவக்க விழாவும் நடக்கிறது.

புதியதாக துவங்கப்பட்டுள்ள ஈஷா மருத்துவமனை 24 மணி நேரமும் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் நவீன மற்றும் மாற்று மருத்துவ முறைகளில் சிகிச்சையும், அவசரகால அறுவை சிகிச்சைகள், உள் நோயாளிகளுக்கான மருத்துவம் போன்றவை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆரோக்ய வாழ்வினை பற்றிய விழிப்புணர்வும், குழந்தைகள் மற்றும் முதியோர் நலம் காத்தல், ஊட்டச்சத்து பற்றாக்குறை நீக்குதல் போன்ற பணிகளும் இம்மருத்துவமனையை மையமாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இதே போன்ற மருத்துவமனை கோவையை அடுத்துள்ள வாவிபாளையம், சேலம் மாவட்டம் குள்ளப்பநாயக்கனூர் கிராமங்களில் செயல்பட்டு வருகிறது. இதுவரை 60 கிராமங்களை சேர்ந்த 35 ஆயிரம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கிராம மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 'ஆரோக்ய கிராமங்கள்' உருவாக்குதல், கிராம பொருளாதார மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மருத்துவமனை திறப்பு விழாவில் 'ஆரோக்ய அலை' நடத்திய பல்வேறு சிறப்பு மருத்துவ முகாம்களில் செயலாற்றிய புகழ்பெற்ற மருத்துவ நிறுவனங்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்படஉள்ளது.

இவ்விழாவில் ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கிவாசுதேவ் முன்னிலையில், தொண்டாமுத்துார் எம்.எல்.ஏ., கண்ணப்பன் தலைமையில் நடக்கிறது. இதில் மைக்ரோ சாப்ட் நிறுவன சேர்மன் ரவி வெங்கடேஷ், சுஸ்லான் நிறுவனத்தை சேர்ந்த ரமேஷ்ராவ், அரசு மருத்துவமனை டீன் குமரன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.